

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் கடப்பேரி ஊராட்சி உதயம் நகரில் கூட்டுறவு துறையின் சார்பில் வி.எல். தனி 116 சுமைதாங்கி நகர கூட்டுறவு கடன் சங்கத்தின் கிளையை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர் .காந்தி திறந்து வைத்து 56பயனாளிகளுக்கு ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடன் உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு. சந்திரகலா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட ரமணன், இணைப் பதிவாளர் மலர்விழி, ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை அவுட் போஸ்டில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநிலத் தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் உடன் கழக நிர்வாகிகள் மா. ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல் மற்றும் மாநில நிர்வாகிகள் பகுதி கழக வட்டக் கழக செயலாளர்கள் மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### த.மு.எ.க.ச. மூத்த தலைவர் பேராசிரியர் அருணன் - நெல்லை ஜெயந்தா உள்ளிட்டோருக்கு

# கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, டிச. 25-

த.மு.எ.க.ச. மூத்த தலைவர் பேரா.அருணனுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

48 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் டிச.27ஆம் தேதி தொடங்குகிறது. புத்தகக் காட்சியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொள்கிறார்.

இந்த தொடக்கவிழாவில் துணை முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் பொற்கிழி விருதுகளையும், தென்னிந்திய புத்தகப் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் (பபாசி) வழங்கும் விருதுகளையும் வழங்க உள்ளார்.

இது தொடர்பாக திங்களன்று (டிச.23) செய்தியாளர் சந்திப்பில் பபாசி தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே.முருகன், பொருளாளர் சுரேஷ் ஆகியோர் கூறியதாவது:-

900 அரங்குகளுடன் கூடிய புத்தகக்காட்சி டிச.27ஆம் தேதி தொடங்கி ஜன.12ந் தேதி வரை நடைபெற உள்ளது.

விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும், வேலை நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும். புத்தகங்களுக்கு 10 விழுக்காடு கழிவு வழங்கப்படும். நுழைவுக்கட்டணமாக 10 ரூபாய் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

புத்தகக் காட்சியை யொட்டி பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியம், பேச்சுப் போட்டிகள் நடைபெறுகிறது.

ஆண்டுதோறும் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருது வழங்கப்படுகிறது. அதன்படி பேரா.அருணன் (உரைநடை), நெல்லை ஜெயந்தா (கவிதை), சுரேஷ் குமார் இந்திரஜித் (நாவல்), என். ஸ்ரீராம் (சிறுகதைகள்), கலைராணி (நாடகம்), நிர்மால்யா (மொழிபெயர்ப்பு) ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

### சிறந்த பதிப்பாளர் விருது!

சிறந்த பதிப்பாளருக்கான பதிப்பகச் செம்மல் க.கணபதி விருது கற்பகம் புத்தகாலயத்திற்கும், சிறந்த நூலகருக்கான விருது டாக்டர் ஆர்.கோதண்டராமனுக்கும், சிறந்த புத்தக விற்பனையாளருக்கான பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் விருது பெல் கோ நிறுவனத்திற்கும், சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா விருது எழுத்தாளர் ஜோதி சுந்தரேசனுக்கும் வழங்கப்படுகிறது.

சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது முனைவர் சபா.அருணாச்சலத்திற்கும், சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது பேரா. பர்வீன் சுல்தானாவிற்கும், சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது எழுத்தாளர் சங்கர சரவணனுக்கும், முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கவிதை இலக்கிய விருது மணவை பொன்.மாணிக்கத்திற்கும், சிறந்த தன்னம்பிக்கை நூலுக்கான சிந்தனைக் கவிஞர் கவிதாசன் விருது மரபின் மைந்தன் முத்தையாவுக்கும் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், சீனிவாசன், மு.அசோகன், எஸ்.தாமோதிரன், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுடி, திருப்பத்தூர் கிழக்கு கே.ஆர்.திருப்பதி, உதயேந்திரம் பேரூர் செயலாளர் ஆ.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தம்மாள்பெருமாள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மு.க.அருள்நிதி, சக்கரவர்த்தி, மேகநாதன், சி.சிவகுமார், மனோகரன், அம்பலவாணன், வி.எஸ்.கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த

# திருவண்ணாமலை என்.கண்ணன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!



### கழகத்தினர் - உறவினர் - நண்பர்கள் அஞ்சலி!

திருவண்ணாமலை, டிச. 25 -

சென்னை மாவட்டம், முரசொலி அலுவலக விநியோகப் பிரிவில் பணியாற்றிய திருவண்ணாமலை என்.கண்ணன் கடந்த ஆண்டு (25.12.2023) அன்று உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

அதனையொட்டி அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (25.12.2024 புதன்கிழமை) அன்னாரின் இல்லம், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகில் உள்ள தென் பள்ளிப்பட்டு கிராமத்தில் உள்ள இல்லத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப் படுகிறது.

இதில் கழக நிர்வாகிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்துகின்றனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தந்தை பெரியாரின் நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏழுமலை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டம் - மரக்காணம் அருகில் மீன்பிடிக்கும் பொழுது

# கழுவெளியில் தவறிவிழுந்து உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.25 -

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகில் மீன் பிடிக்கும் பொழுது கழுவெளியில் தவறிவிழுந்து உயிரிழந்தவர்களின் பெற்றோருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், மரக்காணம் (தெற்கு) கிராமம் சந்தைத் தோப்புத் தெருவைச் சேர்ந்த லோகு (எ) லோகேஷ், த/பெ சுரேஷ் (வயது 24) என்பவர் கடந்த 22.12.2024 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் மரக்காணம் அருகே உள்ள கழுவெளியில் மீன் பிடிக்கும்போது எதிர்பாராத விதமாக கழுவெளியில் தவறி விழுந்து விட்டார்.'

அவருடன் மீன்பிடிக்க வந்த அவருடைய இரண்டு சகோதரர்களான விக்ரம் (வயது 20) மற்றும் சூர்யா (வயது 20) ஆகியோர் அவரை தேடும் பொழுது, அவர்களும் கழுவெளியில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரையும் கழுவெளியில் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று (23.12.2024) மூவரும் தீயணைப்புத் துறையினரால் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர் என்ற துயரமான செய்தியினை அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு செ. அரங்கராசன்

### டிசம்பர் 25 (2002)



**ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.**

**ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.**

**விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. காசிநாதன்

### டிசம்பர் 25 (1991)



**தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.**

**கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**